# வருவாய்த் துறை

# மக்கள் சாசனம்
# 2015

# வருவாய்த் துறை

# மக்கள் சாசனம்

1. எனது இனிய வாழ்த்துக்கள், வருவாய்த் துறை வழங்கும் சேவைகளைப் பற்றி தெரிந்து கொள்ள உங்களை வரவேற்கிறேன்.
2. வருவாய்த் துறை பல்வேறு கால வரையறைக்கு உட்பட்ட சேவைகளை செய்து வருகிறது. அவற்றுள் சில

(i) இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்
(ii) இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்
(iii) இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்
(iv) ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்
(v) ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம்
(vi) முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம்
(vii) ஆதரவற்ற கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
(viii) 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
(ix) நலிந்தோர் குடும்ப துயர் துடைப்புத் திட்டம்
(x) விபத்து நிவாரணத் திட்டம்
(xi) மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் / மின்அடுப்பு வழங்கும் திட்டம்
(xii) சான்றிதழ்கள் வழங்குதல் (மின் ஆளுமை திட்டம் மூலமாக)

(அ) வகுப்பு
(ஆ) நாட்டினம்
(இ) குடும்ப வாரிசு
(ஈ) சொத்து
(உ) பிறப்பு இறப்பு சான்று ( கிராமப் பஞ்சாயத்துகளில்)
(ஊ) வருமானம்
(எ) ஆதரவற்ற விதவை
(ஏ) கலப்புத் திருமணம்

(ஐ) கணவனால் கைவிடப்பட்டவர்

(ஒ) ஒருங்கிணைந்த சான்று

(xiii) இவை தவிர கீழ்க்கண்ட சான்றுகளும் வழங்கப்படுகின்றன.

(அ) திரையரங்களுக்கு தடையின்மைச் சான்று வழங்குதல்

(ஆ) அடகு பிடிப்போர் உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்

(இ) படைக்கலன் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்

(ஈ) வெடிபொருள் சட்டத்தின் கீழ் உரிமம் மற்றும் தடையின்மைச் சான்று

3. வறட்சி, வெள்ளம், சுனாமி, புயல், தீ போன்ற இயற்கை இடர்பாடு காலங்களில் இன்னல்களில் இருந்து மக்களை மீட்க வருவாய்த்துறை கீழ்க்கண்ட சேவைகளை செய்கிறது.

(அ) பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றுதல்

(ஆ) இன்னல் காலங்களில் உணவு, உறைவிடம் வழங்குதல்

(இ) பாதிக்கப்பட்ட வீடுகளை மறுசீரமைப்பு செய்ய நிதி உதவி

இவ்வாறு வருவாய்த்துறை குறிப்பாக உங்களுக்கும் பொதுவாக சமுதாயத்திற்கும் பல்வேறு சேவைகளைச் செய்கிறது.

4. உங்களுக்கான சேவைகளை சிறப்பாகச் செய்வதற்கு உங்கள் ஒத்துழைப்பை வருவாய்த் துறை நாடுகிறது. இது தொடர்பாக கீழ்க்கண்ட தகவல்களை உங்கள் கவனத்திற்குக் கொணர்கிறேன்.

(அ) தேவையான அனைத்துச் சான்றிதழ்களுடன் உரிய காலத்தில் விண்ணப்பித்தல்

(ஆ) உதவி தேவைப்படின் சம்மந்தப்பட்ட அதிகாரியை நேரில் சந்தித்தல்

(இ) இடைத் தரகர்களை அணுகாமல் இருத்தல்

(ஈ) எந்த அரசு ஊழியருக்கும் கையூட்டோ அல்லது ஊக்கிகளோ அளிக்காமல் இருத்தல்

(உ) கையூட்டு கோரப்படின் உயர் அதிகாரிகளை சந்தித்து முறையிடுதல்

5. பொதுவாக வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது மாவட்டாட்சியர் போன்றோரை எந்த ஒரு நாளிலும் சந்திக்கலாம். இருந்த போதிலும் அனைத்து திங்கட்கிழமைகளும் பொதுமக்களின் குறை தீர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமை "பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்" ஆக அழைக்கப்படுகிறது. அந்த தினத்தில் பொதுமக்களின் குறைகளுக்கு சிறப்புக் கவன முன்னுரிமையும் அளிக்கப்படுகிறது. அதைப் போன்று மாதத்தில் இரண்டாவது புதன்கிழமைகளில் மாவட்ட நிர்வாகம் உட்கிராமங்களுக்குச் சென்று பொதுமக்களை நேரிடையாகச் சந்தித்து அந்த இடத்திலேயே அவர்களின் குறைகளை முடிந்த அளவு தீர்த்து வைக்கிறது. மேலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் "மக்களைத் தேடி வருவாய்த்துறை" என்ற அம்மா திட்டத்தின் மூலம் 24.02.2013 முதல், கிராமங்களில் முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு சான்றுகள் மற்றும் உத்தரவுகளை வழங்கி அவர்களின் குறைகளை முடிந்த அளவிற்கு தீர்த்து வைக்கப்படுகின்றன.

6. எங்கள் சேவையை கோரும் உரிமை உங்களுக்கு உண்டு என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் யாவரும் உங்களுக்கு சேவை செய்கிறோமே தவிர சலுகை செய்யவில்லை. இன்னும் சொல்லப் போனால் நீங்கள்தான் சமுதாயத்திற்கு சேவை செய்ய எங்களுக்கு பெரிய வாய்ப்பளித்துள்ளீர்கள்.

**"உங்களுக்கு சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்"**

ஆர்.பி.உதயகுமார்
வருவாய்த் துறை அமைச்சர்

## மக்கள் சாசனம் 2015

| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். | உத்தரவு வழங்கும் அலுவலர் | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **1. இந்திராகாந்தி முதியோர் ஒய்வூதிய தேசியத் திட்டம்.** | ➢ ஒய்வூதியம் **ரூ.1000/–** ஆக உயர்த்தப்பட்டது.<br><br>➢ தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு விலையில்லா வேட்டி/ சேலை வருடத்திற்கு இருமுறை வழங்கப்படும்.<br><br>➢ சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படும். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br><br>➢ 60 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.<br><br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இருத்தல் வேண்டும். | ➢ குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை.<br><br>➢ வயது குறித்த சான்று. | மாவட்டாட்சியர் / வட்டாட்சியர்<br><br>தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்).<br><br>தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | ➢ தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br>➢ சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்.<br><br>➢ மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். | உத்தரவு வழங்கும் அலுவலர் | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும். |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **2. இந்திராகாந்தி விதவைகள் ஒய்வூதிய தேசியத் திட்டம்** | ஒய்வூதியம் ரூ.1000/– ஆக உயர்த்தப்பட்டது.<br>தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு விலையில்லா வேட்டி/ சேலை வருடத்திற்கு இருமுறை வழங்கப்படும்.<br>சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படும். | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இருத்தல் வேண்டும்.<br>40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>விதவையாக இருத்தல் வேண்டும். | குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை.<br>வயது குறித்த சான்று.<br>கணவர் இறந்ததிற்கான சான்று. | மாவட்டாட்சியர்/ வட்டாட்சியர்<br>தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி).<br>தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br>சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்.<br>மாவட்ட ஆட்சியர் |
| **3. இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஒய்வூதிய தேசியத் திட்டம்** | ஒய்வூதியம் ரூ.1000/– ஆக உயர்த்தப்பட்டது.<br>தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு விலையில்லா வேட்டி/ சேலை வருடத்திற்கு இருமுறை வழங்கப்படும்.<br>சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படும். | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இருத்தல் வேண்டும்.<br>18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>ஊனம் நிலை 80% மற்றும் அதற்கு மேல் இருக்க வேண்டும். | குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை.<br>வயது குறித்த சான்று.<br>ஊனத்தின் தன்மைக் குறித்த மாவட்ட மறுவாழ்வு அலுவலரால் வழங்கப்பட்ட சான்று. | மாவட்டாட்சியர்/ வட்டாட்சியர்<br>தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி).<br>தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br>சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்.<br>மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். | உத்தரவு வழங்கும் அலுவலர் | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும். |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **4. ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஒய்வூதியத் திட்டம்** | ➢ ஒய்வூதியம் ரூ.1000/– ஆக உயர்த்தப்பட்டது.<br><br>➢ தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு விலையில்லா வேட்டி/ சேலை வருடத்திற்கு இருமுறை வழங்கப்படும்.<br><br>➢ சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படும். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br><br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br><br>➢ ஊனம் நிலை 60% மற்றும் அதற்கு மேல் இருக்க வேண்டும். | ➢ குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை.<br><br>➢ வயது குறித்த சான்று.<br><br>➢ ஊனத்தின் தன்மைக் குறித்த மாவட்ட மறுவாழ்வு அலுவலரால் வழங்கப்பட்ட சான்று. | மாவட்டாட்சியர்/ வட்டாட்சியர்<br><br>தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br><br>தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | ➢ தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br><br>➢ சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்.<br><br>➢ மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். | உத்தரவு வழங்கும் அலுவலர் | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **5. ஆதரவற்ற விதவைகள் ஒய்வூதியத் திட்டம்** | ➢ ஒய்வூதியம் ரூ.1000/– ஆக உயர்த்தப்பட்டது.<br>➢ தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு விலையில்லா வேட்டி/ சேலை வருடத்திற்கு இருமுறை வழங்கப்படும்.<br>➢ சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படும். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ விதவையாக இருத்தல் வேண்டும். | ➢ குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை.<br>➢ வயது குறித்த சான்று.<br>➢ கணவர் இறந்ததிற்கான சான்று. | மாவட்டாட்சியர்/ வட்டாட்சியர்<br>தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி).<br>தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | ➢ தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br>➢ சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்.<br>➢ மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். | உத்தரவு வழங்கும் அலுவலர் | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **6. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம்.** | ➢ ஒய்வூதியம் ரூ.1000/– ஆக உயர்த்தப்பட்டது. | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். | ➢ குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை. | மாவட்டாட்சியர்/ வட்டாட்சியர் | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | ➢ தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) |
| | ➢ தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு விலையில்லா வேட்டி/ சேலை வருடத்திற்கு இருமுறை வழங்கப்படும். | ➢ 60 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். | ➢ வயது குறித்த சான்று. | தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி). | | ➢ சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர். |
| | ➢ சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படும். | ➢ நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். | ➢ உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்கான உறுப்பினராக இருத்தல் வேண்டும். | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | | ➢ மாவட்ட ஆட்சியர் |

## மக்கள் சாசனம் 2015

| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். | உத்தரவு வழங்கும் அலுவலர் | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **7. ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்** | ➢ ஓய்வூதியம் ரூ.1000/—ஆக உயர்த்தப்பட்டது.<br>➢ தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு விலையில்லா வேட்டி/ சேலை வருடத்திற்கு இருமுறை வழங்கப்படும்.<br>➢ சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படும். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>➢ 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்.<br>➢ சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். | ➢ குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை.<br>➢ வயது குறித்த சான்று.<br>➢ கணவனால் கைவிடப்பட்டவர் என்பதற்கான சான்று. | மாவட்டாட்சியர்/ வட்டாட்சியர்<br>தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி).<br>தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | ➢ தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br>➢ சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்.<br>➢ மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். | உத்தரவு வழங்கும் அலுவலர் | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **8. 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஒய்வூதியத் திட்டம்** | ➢ ஒய்வூதியம் ரூ.1000/– ஆக உயர்த்தப்பட்டது.<br><br>➢ தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நபருக்கு ஒரு விலையில்லா வேட்டி/ சேலை வருடத்திற்கு இருமுறை வழங்கப்படும்.<br><br>➢ சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படும். | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br><br>➢ 50 வயது பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.<br><br>➢ திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும். | ➢ குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை.<br><br>➢ வயது குறித்த சான்று. | மாவட்டாட்சியர்/ வட்டாட்சியர்<br><br>தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி).<br><br>தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | ➢ தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br><br>➢ சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்.<br><br>➢ மாவட்ட ஆட்சியர் |

371-3—2a

## மக்கள் சாசனம் 2015

| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும். | உத்தரவு வழங்கும் அலுவலர் | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 9. நலிந்தோர் குடும்ப துயர் துடைப்புத் திட்டம் | வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் இயற்கையில் மரணமடையும் குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு நிவாரணம்ரூ.10,000/–வழங்கப்படுகிறது. | பொருளீட்டக் கூடிய முக்கிய குடும்பத் தலைவரை இழந்த குடும்ப வாரிசு.<br><br>நிலமற்ற விவசாய கூலித் தொழிலாளரின் குடும்பம்<br>விவசாயக் கூலிகள் .<br>சிறு குறு விவசாயிகள்.<br>ஏனையோருக்கு ஆண்டு வருமானம் ரூ.24,000/– மிகாமல் இருக்க வேண்டும். | குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை.<br><br>குடும்பத் தலைவரின் இறப்புச்சான்று | மாவட்ட ஆட்சியர்/ வட்டாட்சியர்<br><br>தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி).<br><br>தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br><br>சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்.<br><br>மாவட்ட ஆட்சியர் |
| 10. விபத்து நிவாரணத் திட்டம் | வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில் 44 வகையான தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது விபத்து மூலம் மரணமடையும் குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் வாரிசுதாரருக்கு நிவாரணம் ரூ.15,000/– வழங்கப்படுகிறது.<br><br>விபத்தில் காயம் அடைந்தவருக்கு காயத்தின் தன்மைக்கு ஏற்றபடி ரூ. 5000/– முதல் ரூ. 15,000/– வரை வழங்கப்படுகிறது. | பொருளீட்டக் கூடிய முக்கிய குடும்பத் தலைவரை இழந்த குடும்பத்தின் வாரிசு.<br>அறிவிக்கப்பட்ட 44 வகையான தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு. | குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை.<br>முதல் தகவல் அறிக்கை.<br>இறப்புச்சான்று<br>மரணமடைந்த தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் மனு செய்தல் வேண்டும். | மாவட்ட ஆட்சியர்/ வட்டாட்சியர்.<br><br>தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி).<br><br>தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br>சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்.<br>மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| **11. மகளிருக்கு விலையில்லா மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் / மின் அடுப்பு வழங்குதல்** | அன்றாட வாழ்க்கையில் பெரிதும் உபயோகிக்கவும், வேலை பளுவை குறைக்கவும் | அரிசி பெற தகுதியான குடும்ப அட்டை வைத்துள்ள மகளிர் பயனாளிகளுக்கு | குடும்ப அட்டையின் நகல் | இல்லை | மாவட்ட ஆட்சியர் துணை ஆட்சியர் (சிறப்பு செயலாக்கத் திட்டம்) | நிர்ணயிக்கப்பட வில்லை | மாவட்ட ஆட்சியர், துணை ஆட்சியர் (சிறப்பு செயலாக்கத் திட்டம்) |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **12.புயல், வெள்ளம், தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாட்டின்போது சேதமடையும் குடிசை வீடு களுக்கு வழங்கும் நிவாரணம் அரசு ஆணை (நிலை) எண்.678,** வருவாய்த்துறை, நாள் 29.11.2008, (அரசு ஆணை (நிலை) எண். 342, வருவாய்த்துறை, நாள் 09.11.2011.) | 1)முழுவதுமாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.5,000/– அரிசி 10 கிலோ<br>2)பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.2500/– மற்றும் 10 கிலோ அரிசி | பாதிக்கப்பட்ட குடிசையின் உரிமையாளர் | வெள்ளைத் தாளில் மனு | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 24 மணிநேரம் | கோட்டாட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 13.புயல், வெள்ளம், இடிமின்னல் /தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாடுகளால் பருவமழை காலம் மற்றும் பருவமழை அல்லாத காலங்களில் ஏற்படும் உயிர் இழப்பிற்கு வழங்கும் நிவாரணம் (அரசு ஆணை (நிலை) எண். 380, வருவாய்த்துறை, நாள் 25.10.2012.) | (1) உயிரிழப்பிற்கு ரூ.1,50,000/– | (i) இறந்தவரின் வாரிசுதாரர் களுக்கு | 1. வெள்ளைத்தாளில் மனு<br>2. பிரேதப் பரிசோதனை அறிக்கை<br>3. இறப்புச் சான்று<br>4. முதல் தகவல் அறிக்கை<br>5. வாரிசுதாரர்களின் அஞ்சலக சேமிப்பு கணக்கு மற்றும் வங்கி கணக்கு எண்<br>6. வாரிசுச்சான்று | (1) வட்டாட்சியர் | 1) வட்டாட்சியர் | 1) 24 மணி நேரம் | மாவட்ட ஆட்சியர். |
| | (2) முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/– (மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப் பட்டால் மட்டும்) | | | (2)மாவட்ட ஆட்சியருக்கு செயற் குறிப்பினை அனுப்ப வேண்டும் | 2)மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பிற்கிணங்க வருவாய்த் துறையால் ஆணை பிறப்பிக்கப் படுகிறது | | பொருந்தாது |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 14. புயல், வெள்ளம், இடிமின்னல் /தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாடுகளால் பருவமழை காலம் மற்றும் பருவமழை அல்லாத காலங்களில் ஏற்படும் உடலுறுப்பு இழப்பு, கண் இழப்பு போன்றவற்றிற்கு நிவாரணம். அரசாணை(நிலை) எண்.630 வருவாய்த்துறை, [இஇ 3(2)], நாள் 29.10.2007 | (i) 40% முதல் 75% வரை உள்ள உடல் ஊனத்திற்கு ரூ.35,000/– (ii) 75% க்கு மேல் உடல் ஊனம் ஏற்பட்டால் ரூ.50,000/– | தனியர் | அரசு மருத்துவரால் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் குழுவினரால் சான்றிடப்பட்டு இருக்க வேண்டும் | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 24 மணி நேரம் | மாவட்ட ஆட்சியர். |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்படவேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 15. புயல், மழை, வெள்ளம் மற்றும் தீ போன்ற இயற்கை சீற்றங்களினால் கால்நடைகள் இறக்க நேரிடும் போது வழங்கப்படும் நிவாரணம் (அரசு ஆணை எண். 630, வருவாய்த்துறை நாள் 29.10.2007 மற்றும் அரசு ஆணை எண். 342, வருவாய்த்துறை நாள் 09.11.2011) | **கறவை இனங்கள்** பசு, எருமை ஒன்றுக்கு ரூ.20,000/– வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு ஒன்றுக்கு ரூ.2000/– ஒட்டகம்/குதிரை/எருது/ ஒன்றுக்கு ரூ.10,000/= கன்று, கழுதை ஒன்றுக்கு ரூ.5,000/= (1 பெரிய அல்லது 4 சிறிய பால் கொடுக்கக்கூடிய கால்நடைகளுக்கு மட்டும் 1 பெரிய அல்லது 2 சிறிய பாரம் சுமக்கும் கால்நடைகளுக்கு மட்டும்) **கோழியினம்** இறந்த ஒரு கோழிக்கு ரூ100/– என்ற அளவில் ஒரு நபருக்கு அதிகபட்சமாக ரூ.300/– என நிவாரணம் வரையறுக்கப்படுகிறது. மேலும் கோழியினம் குறிப்பிடப்பட்ட இயற்கை இடர்பாடுகளினால் இறந்திருக்க வேண்டும். | பாதிக்கப்பட்ட கால்நடைகளின் உரிமையாளர் | 1) வெள்ளைத்தாளில் மனு<br>2) மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை அலுவலரின் கால்நடை இறந்ததற்கான சான்று | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 24மணி நேரம் | மாவட்ட ஆட்சியர். |

## மக்கள் சாசனம் 2015

| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 16.பருவமழை காலத்தில் புயல் வெள்ளத்தால் சேதமடையும் பயிர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம்<br>அரசாணை (நிலை) எண்.7, வருவாய்த்துறை, நாள் 09.01.2013, அரசாணை(நிலை) எண்.123, வருவாய்த்துறை, நாள் 25.04.2013 | 50% மற்றும் அதற்கு மேல் சேதமடையும் விவசாயப் பயிர்களுக்கு உண்டான மானியம்.<br>பயிர் — ரூ. (ஏக்கர் ஒன்றுக்கு)<br>நெல் — ரூ.5000/-<br>பாசன ஆதாரமுள்ளது<br>இதர பயிர் வகைகள் (நெற்பயிர், நீண்டகால மற்றும் மல்பரி அல்லாத பயிர்கள்) — ரூ.4000/-<br>பாசன ஆதாரமற்றது<br>இதர பயிர் வகைகள் (நெற்பயிர், நீண்டகால மற்றும் மல்பரி அல்லாத பயிர்கள்) — ரூ.3000/-<br>மல்பரி — ரூ.3000/-<br>நீண்டகாலப் பயிர்கள் — ரூ.4000/- | பாதிக்கப்பட்ட சாகுபடியாளர் | வெள்ளைத் தாளில் மனு | வட்டாட்சியர் | அரசு வருவாய்த்துறை | அரசாணை பெற்ற பின் | மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | மேல்முறையீட்டு அலுவலர் / குறை தீர்க்கும் அலுவலர் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **17.சான்றிதழ்கள் வழங்கல் – வகுப்புச் சான்றிதழ்கள்** | 1. வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வகுப்புச் சான்று வழங்குதல் | 1)அரசாணை(நிலை) எண் 28 பி.ப., மி.பி.ப. & சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 19.07.1994<br><br>2)அரசாணை (நிலை) எண்.100 பி.ப., மி.பி.ப. & சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 24.11.1997 வ.எண்.1 முதல் 143 வரை குறிப்பிடப்பட்டவர்கள் | (அ) வெள்ளைத்தாளில் மனு மற்றும்<br>(ஆ) கைவசம் உள்ள ஆதாரங்கள் | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய்த் துறை, நாள்15.06.1991 | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை(நிலை) எண்.921 வருவாய்த் துறை, நாள்15.06.1991 | 7 நாட்கள் | வட்டாட்சியர்/ மாவட்ட ஆட்சியர்<br><br>அரசாணை (நிலை) எண் 235 வருவாய்த் (வ.நி 3(2)) துறை, நாள் 26.06.2015. |

371-3—

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| சான்றிதழ்கள் வழங்கல் – வகுப்புச்சான்றிதழ்கள் –தொடர்ச்சி | 2. வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வகுப்புச் சான்று வழங்குதல் | 1)அரசாணை (நிலை) எண் 28 பி.ப., மி.பி.ப. & சிறுபான்மையினர் நலத்துறை துறை நாள் 19.07.1994<br>2)அரசாணை (நிலை) எண்.100 பி.ப., மி.பி.ப. & சிறுபான்மையினர். நலத்துறை நாள் 24.11.1997 வ.எண்.1 முதல் 143 வரை குறிப்பிடப்பட்டவர்கள் | (அ) வெள்ளைத்தாளில் மனு மற்றும் (ஆ) கைவசம் உள்ள ஆதாரங்கள் | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.92 வருவாய்த் துறை நாள்15.06.1991 | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய்த் துறை, நாள்15.06.1991 | 7 நாட்கள் | வட்டாட்சியர்/ மாவட்ட ஆட்சியர் அரசாணை (நிலை) எண் 235 வருவாய்த் (வ.நி 3(2))துறை, நாள் 26.06.2015. |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **சான்றிதழ்கள் வழங்கல் – வகுப்புச் சான்றிதழ்கள் –தொடர்ச்சி** | 3. வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு **சீர்மரபினர்** வகுப்பினருக்கு வகுப்புச் சான்று வழங்குதல் | 1)அரசாணை எண் 28 பி.ப., மி.பி.ப. & சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 19.07.1994<br>2)அரசாணை எண்.100 பி.ப., மி.பி.ப. & சிறுபான்மையினர் நலத்துறை நாள் 24.11.1997 வ.எண்.1 முதல் 143 வரை குறிப்பிடப்பட்டவர்கள் | (அ) வெள்ளைத் தாளில் மனு மற்றும்<br>(ஆ) கைவசம் உள்ள ஆதாரங்கள் | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய்த் துறை, நாள்15.06.1991 | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய்த் துறை, நாள்15.06.1991 | 7 நாட்கள் | வட்டாட்சியர்/ மாவட்ட ஆட்சியர் அரசாணை (நிலை) எண். 235, வருவாய்த் (வ.நி 3(2)) துறை, நாள் 26.06.2015. |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | மேல்முறையீட்டு அலுவலர் / குறை தீர்க்கும் அலுவலர் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| சான்றிதழ்கள் வழங்கல் – வகுப்புச்சான்றிதழ்கள் –தொடர்ச்சி | 4. வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு **ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு** வகுப்புச் சான்று வழங்குதல் | 1)அரசாணை(நிலை) எண். 1773 ச.ந துறை நாள் 23.06.1981 ல் குறிப்பிடப்பட்டவர்கள் 2)அரசாணை (நிலை) எண்.1597 ஆ.தி.ந துறை நாள் 27.09.1990. | (அ) வெள்ளைத் தாளில் மனு மற்றும் (ஆ) கைவசம் உள்ள ஆதாரங்கள் | வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.581 வருவாய், நாள் 03.04.1987 | வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.581 வருவாய் நாள்03.04.1987 | 2 நாட்கள் அரசு கடித எண். H/ADW-2/ 2001 -7 நாள் 14.2.2002 | வருவாய் கோட்ட அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர், மாவட்ட விழிப்புக்குழு. அரசாணை (நிலை) எண் 235 வருவாய்த் (வ.நி 3(2))துறை, நாள் 26.06.2015. |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | மேல்முறையீட்டு அலுவலர் / குறை தீர்க்கும் அலுவலர் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| சான்றிதழ்கள் வழங்கல் – வகுப்புச் சான்றிதழ்கள் தொடர்ச்சி | 5. வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு பழங்குடியின வகுப்பினருக்கு வகுப்புச் சான்று வழங்குதல் | 1)அரசாணை(நிலை) எண். 1773 ச.ந துறை நாள் 23.06.1981 ல் குறிப்பிடப்பட்டவர்கள் 2)அரசு கடித எண். 8098 ஆ.தி.ந. –2/ 2003 – 4 நாள் 16.02.2004. | (அ) வெள்ளைத் தாளில் மனு மற்றும் (ஆ) கைவசம் உள்ள ஆதாரங்கள் | வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அரசாணை (நிலை) எண்.31 ஆ.தி.& ப.ந.து., நாள் 4.3.1999. | வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அரசாணை (நிலை) எண்.31 ஆ.தி. & ப.ந.து., நாள் 4.3.1999. | 7 நாட்கள் 15 நாட்கள் விரிவான விசாரணை இனங்களில் அரசு கடித எண். H/ADW-2/ 2001 -7 நாள் 14.2.2002 | மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர், மாவட்ட விழிப்புக்குழு. அரசாணை (நிலை) எண் 235 வருவாய்த் (வ.நி 3(2))துறை, நாள் 26.06.2015. |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி** | **6. வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு பிறப்பிடச் சான்று வழங்குதல்** | பிறப்பிடச் சான்று பெற 5 வருடங்களுக்கு மேலாக வட்டத்தில் ஒரே ஊரில் குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். ப.மு.(க்யூ) 45455 / 88 நாள் 19.08.1988. | (1) வெள்ளைத் தாளில் மனு மற்றும் (2) வாக்காளர் பட்டியல் நகல் (3) பள்ளி ஆவணங்கள் (4) இருப்பிடம் பற்றிய இதர ஆவணங்கள் (5) வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு இலவசம் மற்றவர்களுக்கு கட்டணம் ரு.10/– வட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்தலாம் அரசாணை (நிலை) எண்.95 வருவாய் நாள் 02.03.2003 | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய் நாள் 15.6.1991. | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய் நாள் 15.6.1991. | 7 நாட்கள் ப.மு. (க்யூ) 45455/88 நாள் 19.08.1988 | மாவட்ட ஆட்சியர் |

20.02.2003

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி** | 7. வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு **இருப்பிடச் சான்று** வழங்குதல் | இருப்பிடச்சான்று பெற 5 வருடம் ஒர் இடத்தில் தொடர்ந்து வசிப்பவராக இருத்தல் வேண்டும். | (1) வெள்ளைத்தாளில் மனு மற்றும் (2) பள்ளி ஆவணங்கள் (3) இருப்பிடம் பற்றிய இதர ஆவணங்கள் (4) தொலைபேசி இணைப்பக ரசீது (5) சமையல் எரிவாயு இணைப்பக ரசீது. (6)வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு இலவசம் மற்றவர்களுக்கு கட்டணம் ரூ.10/– வட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்தலாம் அரசாணை (நிலை) எண்.95 வருவாய் நாள் 02.03.2003. | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய் நாள் 15.6.1991. | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய் நாள் 15.6.1991. | 7 நாட்கள் ப.மு. (க்யூ) 45455/88 நாள் 19.08.1988 | மாவட்ட ஆட்சியர் |

20-02-2003

மக்கள் சாசனம் 2015

| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி | 8. படிப்பு உதவித் தொகை மற்றும் கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு வருமானச் சான்று வழங்குதல் | பள்ளி / கல்லூரி மாணவ / மாணவிகள் | (1) வெள்ளைத்தாளில் மனு மற்றும் (2) பெற்றோரின் சம்பள வருமானச் சான்றிதழ் ஆதாரம். (3) இதர வருமானம். (4) வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு இலவசம் மற்றவர்களுக்கு கட்டணம் ரூ.10/–வட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்தலாம் அரசாணை (நிலை) எண்.95 வருவாய் நாள் 20.02.2003. | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய் நாள் 15.6.1991. | மண்டல துணை வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.921 வருவாய் நாள் 15.6.1991. | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |
| | •••• வட்டாட்சியர் அலுவலகங்களில், மாணவர்கள் சான்றிதழ்களை பெறுவதில் ஏற்படும் இடையூறுகளை தவிர்க்கும் பொருட்டு 10 மற்றும் 12 –ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அரசாணை(நிலை) எண்: 165, வருவாய்த்துறை, நாள் 01.04.1999–ன் படியும் மற்றும் 6–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அரசாணை(நிலை)எண்:184, நாள்: 05.06.2012 –ன் படியும், மாணவர்களிடமிருந்து சான்றிதழ் கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களால் பெறப்பட்டு, தலைமை ஆசிரியரின் சான்று ஒப்பத்துடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, வருவாய்த்துறை அலுவலர்களின் உரிய விசாரணைக்குப்பின் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு மொத்தமாக அனுப்பப்பட்டு பள்ளி தலைமையாசிரியர்கள் மூலம் அந்த சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. | | | | | | |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி** | **9.**அனாதை இல்லத்தில் சேருவதற்கு **ஆதரவற்றவருக்கான சான்றிதழ்** | சம்பந்தப்பட்ட நபர் | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) தாய் தந்தை இறப்புச் சான்று<br>(3) வருமானச் சான்று | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 7 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |
| | **10.**வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெற ஆதரவற்ற **விதவை சான்றிதழ்** | ஆதரவற்ற விதவை (குடும்ப ஓய்வூதியம் உட்பட அனைத்து வருமானமும் மாதம் ரூ.1000/– பெறுபவர்கள் மட்டும்) அரசாணை (நிலை) எண்.395 ப.ம.நி.சி. (பணி எஸ்) நாள் 4.11.1998. | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) கணவன் இறப்புச் சான்றிதழ்<br>(3) வருமானச் சான்றிதழ் | வருவாய் கோட்ட அலுவலர் | வருவாய் கோட்ட அலுவலர் | 30 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |

371-3—5

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி | 11. சொத்துரிமைக்கும் அரசு ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்வதற்கும் வாரிசு சான்றிதழ் (மின் இணைப்பு, வீட்டு வரி, தொலைபேசி இணைப்பு, பட்டா மாற்றம், வங்கிக் கணக்கு இறந்தவர் அரசு ஊழியராக இருப்பின் பணி நியமனம் பெற) | இறந்தவரின் நேரடி வாரிசுதாரர்கள் அரசு கடித நிலை எண். 1534, வருவாய், நாள் 28.11.1991 | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2)இறப்புச் சான்றிதழ்<br>(3) குடும்ப நபர்கள் குறித்த விவரம் அடங்கிய ஆவணம் | வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.581, வருவாய், நாள் 03.04.1987 | வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.581, வருவாய், நாள் 03.04.1987 | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **சான்றிதழ்கள் வழங்கல் –** தொடர்ச்சி | **12. இறப்புச் சான்றிதழ்** | வாரிசுகள் | (1) வெள்ளைத் தாளில் மனு<br>(2) மருத்துவமனை/ நகராட்சி/ மாநகராட்சியிடம் பெற்ற சான்றிதழ்<br>(3) விண்ணப்பக் கட்டணம் ரூ.2/– | துணை வட்டாட்சியர் | துணை வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |
| | **13. பிறப்புச் சான்றிதழ்** (பள்ளி சேர்க்கைக்கு) | பள்ளியில் சேர விழையும் குழந்தையின் தாய்/ தந்தை | (1) வெள்ளைத் தாளில் மனு<br>(2) மருத்துவமனை/ நகராட்சி/ மாநகராட்சியிடம் பெற்ற சான்றிதழ்<br>(3)விண்ணப்பக் கட்டணம் ரூ.2/– | துணை வட்டாட்சியர் | துணை வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |

371-3—5a

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி** | **14. கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற ஒருங்கிணைந்த சான்று** | பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியரின் வாரிசுகளின் தகுதியுடையவர் | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) இறப்புச் சான்று<br>(3) வாரிசுச் சான்று<br>(4) குடும்ப அட்டை | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |
| | **15. கலப்பு திருமண சான்றிதழ்,** அரசு சலுகை மற்றும் கல்விக்கூடத்தில் சேருவதற்கு | கணவன்/ மனைவி | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) திருமண சான்றிதழ்<br>(3) கணவன்/ மனைவி இருவரின் வகுப்பு குறித்த ஆவணங்கள் | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி** | **16.ஆதரவற்ற பெண்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமைப் பெற சான்றிதழ்** | கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் | (1) வெள்ளைத் தாளில் மனு | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |
| | **17.தொலைந்துபோன பள்ளி சான்றுகளின் நகல் பெற சான்றிதழ்** | சம்பந்தப்பட்ட பள்ளி/ கல்லூரி மாணவர் | (1) வெள்ளைத் தாளில் மனு<br>(2) காவல் நிலையத்தின் முதல் தகவல் அறிக்கையின் நகல் | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்படவேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி | 18. வங்கி கடன்/ பிணையம் மற்றும் அரசு ஒப்புதல் பெற செல்வ நிலை சான்றிதழ் (Solvency Certifcate) | பெருமானமுடைய சொத்தின் உரிமையாளர் | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) பத்திர நகல்<br>(3) சொத்து வரி ரசீது<br>(4) சிட்டா/ அடங்கல் நகல்.<br>(5) ரூ.50,000/– வரை ரூ.100/– அதற்கு மேல் ஒவ்வொரு ரூ.50,000/–க்கும் ரூ.200/– அரசு கருவூலத்தில் செலுத்திய ரசீது அரசு ஆணை (நிலை) எண்.95, வருவாய், நாள் 20.02.2003. | வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.581, வருவாய், நாள் 03.04.1987 | வட்டாட்சியர் அரசாணை (நிலை) எண்.581, வருவாய், நாள் 03.04.1987 | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |
| | 19 ஒய்வூதியம் பெற உயிருடன் வாழும் சான்றிதழ் | ஒய்வூதியம் பெறுபவர் | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) நேரில் ஆஜராகி ஒப்பாய்வு | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 2 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி | 20. வீட்டுமனை ஒதுக்கீடு பெற வீட்டு மனை இல்லை என்ற சான்றிதழ் | வீட்டுமனை இல்லாதவர் | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) வாடகை ரசீது | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 7 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |
| | 21. அரசு கல்லூரி மற்றும் பள்ளிகளில் சேர பட்டதாரி இல்லை என்ற சான்றிதழ் | சம்பந்தப்பட்ட மாணவன் | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) குடும்பத்தினரின் பள்ளி மாற்றுச் சான்று | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |
| | 22. கடன் பெற சொத்துரிமை சான்றிதழ் | சொத்தின் உரிமையாளர் | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) பத்திர நகல்<br>(3) சிட்டா/ அடங்கல் நகல் | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |

| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி** | **23. கடன்பெற முன்கடன் பாக்கி ஏதுமில்லை என்ற சான்றிதழ்** | விண்ணப்பத் தாரர் | (1) வெள்ளைத்தாளில் மனு<br>(2) பணிபுரியும் அலுவலகத்தின் உயர் அதிகாரியின் சான்று | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |
| | **24. திருமணத்திற்கு அரசு மானியம் பெற திருமணமாகவில்லை என்ற சான்று** | விண்ணப்பத் தாரர் | (1) வெள்ளைத்தாளில் மனு | வட்டாட்சியர் | வட்டாட்சியர் | 15 நாட்கள் | மாவட்ட ஆட்சியர் |

| மக்கள் சாசனம் 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | பயன்கள் | தகுதியுடையோர் | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | உத்தரவு வழங்கும் அலுவலர் | ஆணை வழங்க கால வரையறை | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| சான்றிதழ்கள் வழங்கல் – தொடர்ச்சி | **25. தொழில் சலுகை பெற அமைவிடச்சான்று** | தொழில் முனைவர் | (1) வெள்ளைத் தாளில் மனு<br>(2) பத்திரச் சான்று<br>(3) அடங்கல்/ சிட்டா நகல்<br>(4) அமைவிட வரைப்படம் | வருவாய் கோட்ட அலுவலர்/ சார் ஆட்சியாளர் | வருவாய் கோட்ட அலுவலர்/ சார் ஆட்சியாளர் | ஒரு மாதம் | மாவட்ட ஆட்சியர் |
| | **மின் ஆளுமை திட்டம்**<br>வருவாய்த்துறையில் பொதுமக்களுக்கு விரைவில் சேவை அளிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் மின் ஆளுமை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, பொது சேவை மையங்கள் வழியே பொது மக்களுக்கு வகுப்புச் சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று, முதல் தலைமுறை பட்டதாரிச் சான்று மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கான சான்றிதழ்கள் மின் ஆளுமை திட்டத்தின் மூலம் விரைந்து பரிசீலிக்கப்பட்டு, டிஜிட்டல் முறையில் சான்றுகள் வழங்கப்படுகின்றன. | | | | | | |